Dhinathdhalam@gmail.com www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை
தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper
ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

செய்தியாளர்கள் தேவை

தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை
☎ 94440 82959

மலர் Volume : 01 | இதழ் Issue : 036 | புதன்கிழமை Wednesday | 06.05.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# தவெக சட்டமன்றக் குழு தலைவராக விஜய் தேர்வு



சென்னை: தவெக சட்டமன்றக் குழு தலைவராக அக்கட்சியின் தலைவர் விஜய் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

2026 தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 4 முனைப்போட்டி நிலவியது. திமுக தலைமையில் ஒரு அணி, அதிமுக தலைமையில் மற்றொரு அணி களம் கண்டது. விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் 233 தொகுதிகளிலும் போட்டியிட்டது.

விஜய்யின் தவெக 108 இடங்களைக் கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. எனினும், ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மை பலமான 118 இடங்களைப் பெறாததால், தமிழகத்தில் தற்போது 'தொங்கு சட்டப்பேரவை' அமையும் சூழல் உருவாகியுள்ளது.

இந்நிலையில், தவெக தலைவர் விஜய் சென்னை பனையூரில் உள்ள தவெக தலைமை அலுவலகத்துக்கு வந்தார். சட்டப்பேரவைத் தேர்தலில் வென்ற தவெக எம்எல்ஏக்களை விஜய் சந்திக்கிறார்.

மேலும், கூட்டத்தில் கட்சியின் சட்டமன்றக் குழு தலைவராக தேர்வு செய்யப்பட இருக்கிறார் என தகவல் வெளியாகியுள்ளது. ஆட்சியமைக்க ஆளுநருக்கு கடிதம் எழுதியுள்ளதாகக் கூறப்படும் நிலையில், அடுத்த நடவடிக்கை குறித்து விஜய் ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார். விஜய்யின் தவெக 108 இடங்களைக் கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. எனினும், ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மைபலத்தை பெறவில்லை. இதையடுத்து, ஆட்சியமைக்க ஆளுநருக்கு தவெக கடிதம் எழுதியுள்ளதாக கூறப்படும் நிலையில், சென்னை பனையூரில் உள்ள அலுவலகத்தில் சட்டப்பேரவைத் தேர்தலில் வென்ற தவெக எம்எல்ஏக்களை விஜய் சந்தித்தார்.

அப்போது, ஆட்சியமைப்பது தொடர்பாக ஆலோசனை நடந்ததாகவும் தெரிகிறது. இதையடுத்து, அந்த ஆலோசனைக்கூட்டத்தில்தவெக சட்டமன்றக் குழு தலைவராக அக்கட்சியின் தலைவர்விஜய்ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டுள்ளார். விஜய் முதல்வராக ஆதரவு அளித்து உறுதிமொழி பத்திரத்தில் எம்எல்ஏக்களிடம் கையெழுத்து பெறப்பட்டது.

இதற்கிடையில்,கூட்டணிக்காக சில கட்சிகளுடன் விஜய் தரப்பில் ஆதரவு கோரப்பட்டு வருவதும் கவனிக்கத்தக்கது.

எதிர்க்கட்சியாக இருந்து சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்ட அதிமுக, 47 இடங்களில் வெற்றி பெற்றது. அந்த கட்சிக்கு 21.21 சதவீத வாக்குகள் கிடைத்தன. அதிமுக தலைமையிலான கூட்டணியில் போட்டியிட்ட பாட்டாளி மக்கள் கட்சி 4 இடங்களில் வெற்றி பெற்றது. பாரதிய ஜனதா கட்சி (2.97%) , அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் ஆகியவை தலா 1 இடத்திலும் வெற்றி பெற்றன.

ஆட்சியமைக்க 118 இடங்கள் தேவைப்படும் நிலையில்,தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. அதிலும் விஜய் பெரம்பூர், திருச்சி கிழக்கு என இரண்டு தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளதால் ஒரு தொகுதியில் ராஜிநாமா செய்ய நேரிடும். அந்த வகையில் தமிழக வெற்றிக் கழகத்தின் பலம் 107 ஆக உள்ளது. எனவே ஆட்சி அமைக்க இன்னும் 11 இடங்கள் தேவைப்படுகிறது.

இந்த நிலையில் தனிப் பெரும் கட்சியான தமிழக வெற்றிக் கழகத்தை ஆட்சிஅமைக்கஅழைக்குமாறு தமிழ்நாடு ஆளுநர்ராஜேந்திரவிஸ்வநாத் அர்லேகருக்கு தவெக தலைவர் விஜய் இமெயில் மூலம் கடிதம் அனுப்பியுள்ளார். மேலும் ஆட்சி அமைக்க அழைத்தால் அடுத்த 2 வாரங்களில் சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிப்பேன் என குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் முடிவு எடுப்பார்.

இந்த நிலையில், பனையூரில் உள்ள தவெக தலைமையகத்தில்எம்எல்ஏக்கள் கூட்டம் நடைபெறவுள்ளது. இதில் சட்டமன்ற கட்சித் தலைவராக விஜய் முறைப்படி தேர்வு செய்யப்படவுள்ளார்.

இதனிடையே, தேர்தல் முடிவு தொடர்பாகதிமுக தலைவர் மு.க ஸ்டாலினை, கூட்டணிக் கட்சி தலைவர்களான தொல். திருமாவளவன் எம்பி, பெ.சண்முகம், வீரபாண்டியன், எல். கே.சுதீஷ் ஆகியோர் சந்தித்தனர்.

# “நம்மைவிட 17.43 லட்சம் வாக்குகளை மட்டுமே தவெக கூடுதலாக பெற்றுள்ளது” மு.க.ஸ்டாலின் பேச்சு



சென்னை: 'கூடுதல் தொகுதிகளில் வெற்றி பெற்ற கட்சியானது, நம்மை விட 17.43 இலட்சம் வாக்குகளை மட்டுமே கூடுதலாகப் பெற்றுள்ளது. நமக்கும் அவர்களுக்குமான வாக்கு விழுக்காடு வேறுபாடு என்பது3.52விழுக்காடு மட்டுமே' என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ்பதிவில், "நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியின் வேட்பாளர்களுக்கு வாக்களித்த தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை உண்மை உணர்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் அனைவரின் ஒவ்வொரு வாக்கையும் விலைமதிப்பற்ற நம்பிக்கையாக நான் கருதுகிறேன்.

இப்போது வரை கிடைத்துள்ள புள்ளிவிபரங்களின்படி திமுக கூட்டணிக்கு 1 கோடியே 54 லட்சத்து 82 ஆயிரத்து 782 வாக்குகள்கிடைத்துள்ளன. இம்மக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கூடுதல் தொகுதிகளில் வெற்றி பெற்ற கட்சியானது, நம்மை விட 17.43லட்சம்வாக்குகளை மட்டுமே கூடுதலாகப் பெற்றுள்ளது. நமக்கும் அவர்களுக்குமான வாக்கு விழுக்காடு வேறுபாடு என்பது 3.52% மட்டுமே. என்னைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டு மக்கள் நம் மீது வைத்துள்ள நம்பிக்கையை வலிமையானதாகவே கருதுகிறேன்.

நமக்கு வாக்களித்த மக்களுக்கு நேரடியாகச் சென்று நன்றி தெரிவிக்கும் கடமையை நாம் எப்போதும் செய்து வருகிறோம்.அந்த வகையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வெற்றி பெற்ற வேட்பாளர்கள் அனைவரும், உடனடியாக வாக்களித்த மக்களைச் சந்தித்து நன்றி தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மக்களாட்சியில்மக்களே நம் வணக்கத்துக்குரியவர்கள். அவர்களுக்காகவே நாம் கட்சி நடத்துகிறோம்.அவர்களுக்காகவே நாம் அரசியலில் இயங்குகிறோம். எனவே, அனைத்து மக்களுக்கும் நன்றி தெரிவிக்க நேரில் செல்லுமாறு அனைத்து வேட்பாளர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆறு முறை ஆட்சியில் இருந்துள்ளது. நாம் பார்க்காத வெற்றியும் இல்லை; நாம் சந்திக்காத தோல்வியும் இல்லை. அரசியல் பொதுவாழ்வில் கொள்கையைக் காக்கும் பயணத்தில் நமது கொள்கை தோல்வி அடைந்துவிடக் கூடாது என்பதில்தான் நாம் எப்போதும் கவனமாக இருப்போம். வெற்றியாக இருந்தாலும், தோல்வியாக இருந்தாலும் அதனைச் சமமாகக் கருதி தனது லட்சியப் பயணத்தை நடத்துபவர்கள்தான் கழக உடன்பிறப்புகள். அதனால்தான் முக்கியமான மாநாடுகள், பொதுக்கூட்டங்களில் பேசும்போதெல்லாம், தமிழ்நாடு முழுமைக்குமான தொண்டர்கள் அனைவருக்கும் வணக்கம் வைத்து விட்டுத்தான் நான் தொடங்குவேன். இயக்கத்தின் இரத்த நாளங்கள், வேர்கள் நீங்கள்தான்.

எனக்கு ஆறுதல் சொல்லி பலரும் குறுஞ்செய்தி அனுப்பி வைத்து வருகிறீர்கள். உங்களால் உருவாக்கப்பட்ட எனக்கு, உங்களது வலிமையால் வலிமை பெற்ற எனக்கு நீங்கள் உடனிருக்கும்வரைஎன்ன கவலை? நாம் அனைவரும் தலைவர் கலைஞரின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகள். அந்த உணர்வோடு தொடர்ந்து நாம் பயணிப்போம்.

உங்கள் உழைப்பால் விளைந்த அறுவடைதான் 1.54 கோடி வாக்குகள். உங்கள் உழைப்புக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்? தலைமைத் தொண்டன் என்ற உணர்வோடுநாம்தொடர்ந்து பயணிப்போம். ஆளும் கட்சியாக இருந்தால் மக்களுக்கான திட்டங்களைத் தீட்டுவோம். எதிர்க்கட்சியாக இருந்தால் மக்களுக்கான கோரிக்கைகளுக்காகவே போராடுவோம். அந்த வகையில் இப்போது வலிமையான எதிர்க்கட்சியாக இருந்துமக்களுக்கான அரசியலை நாம் தொடர்வோம்.


## வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959


# புதிய அரசு பதவியேற்பு குறித்து தலைமைச் செயலாளர், டிஜிபி, அதிகாரிகள் ஆலோசனை

சென்னை:

தமிழகத்தில் புதிதாக அரசு பொறுப்பேற்கவுள்ள நிலையில், தலைமைச் செயலாளர் மற்றும் டிஜிபி ஆகியோர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் தலைமைச் செயலாளர் சாய்குமார், உள்துறை செயலாளர் மணிவாசன், காவல் துறை டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் மற்றும் சென்னை காவல் ஆணையர் உள்ளிட்ட பல்வேறு அதிகாரிகளும் பங்கேற்றுள்ளனர்.



தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. இதனையடுத்து தவெகவின் சட்டமன்றக் குழு தலைவராக அக்கட்சியின் தலைவர் விஜய் இன்று ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தச் சூழலில், ஆட்சியமைக்க உரிமை கோரி ஆளுநருக்கு விஜய் கடிதம் எழுதியுள்ளார்.

தவெக தலைமையிலான புதிய அரசு அமையவுள்ள நிலையில், பதவியேற்பு விழா மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆலோசிக்க இன்று தலைமைச் செயலகத்தில் நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் தலைமைச் செயலாளர் சாய்குமார், உள்துறை செயலாளர் மணிவாசன், காவல் துறை டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் உள்ளிட்ட பல்வேறு உயர் அதிகாரிகளும் பங்கேற்றுள்ளனர்.


செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt




தமிழ்நாடு முழுவதும் கடந்த ஏப்ரல் 23ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் தொகுதியில் தவெக வேட்பாளராக களம் கண்ட கே.ஏ.செங்கோட்டையன் நடந்து முடிந்த வாக்கு எண்ணிக்கையில், இவரை எதிர்த்து போட்டியிட்ட அதிமுக, திமுக வேட்பாளர்களை காட்டிலும் கூடுதலான வாக்குகள் பெற்றார். இந்நிலையில் தேர்தல் நடத்தும் அலுவலர் சிவானந்தம் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை செங்கோட்டையனிடம் வழங்கினார்.

# ஈரோடு மொடக்குறிச்சி தொகுதியில் தவெக வேட்பாளர் வெற்றி



ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில் தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் டி.சண்முகன் விசில் சின்னத்தில் போட்டியிட்டு 59978 வாக்குகள் பெற்று தன்னை எதிர்த்து போட்டியிட்டவரை விட 2430 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்... அவருக்கு தமிழக வெற்றி கழகத்தின் பாசூர் பேரூர் செயலாளர் எம்.ஞானசேகரன் வாழ்த்துக்களை தெரிவித்ததார்.




ஈரோட்டில் அதிகரித்து வரும் கோடை வெயிலால் வாகன ஓட்டிகள் அவதிப்பட்டு வருகின்றனர். இதனைதவிர்க்க, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை தொடர்ந்து சூரம்பட்டி 4 ரோடு பகுதியில் நேற்று பசுமை பந்தல் அமைக்கும் பணி நடைபெற்றது. அனல்காற்று மற்றும் வெயிலின் தாக்கத்திலிருந்து தப்பிக்க மாநகராட்சி எடுத்துள்ள இந்த நடவடிக்கை, சிக்னல்களில் காத்திருக்கும் இருசக்கர வாகன ஓட்டிகள் (ம) பாதசாரிகளுக்கு பெரும் நிம்மதியை அளித்துள்ளது.



ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதியில் தவெக வேட்பாளர் ஆனந்த் மோகன், முன்னாள் அமைச்சர் முத்துசாமியை தோற்கடித்து வெற்றி பெற்றார். வாக்கு எண்ணும் மையத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் சிந்துஜா வெற்றிக்கான சான்றிதழை அவருக்கு வழங்கினார். அமைச்சராக இருந்த முத்துசாமியின் இத்தோல்வி அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



ஈரோடு கிழக்குத் சட்டமன்ற தொகுதியில் வென்ற தவெக விஜய்பாலாஜி, அடிப்படைப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு முக்கியத்துவம் அளிப்பதாகத் தெரிவித்தார். காய்கறி சந்தையை நகருக்கு வெளியே மாற்றாமல், மீண்டும் பழைய இடத்திற்கே கொண்டு வர உரிய நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்தார். தொகுதி மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற முன்னுரிமை அளிப்பதாகக் கூறியுள்ள விஜய்பாலாஜியின் இந்த அறிவிப்பு, பொதுமக்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது.




ஈரோடு மாவட்டத்தில் கோடை வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், மதிய நேரத்தில் அனல்காற்று வீசி, சிக்னல்களில் நிற்கும் 2சக்கர வாகன ஓட்டிகள், பாதசாரிகள் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். இதைத் தொடர்ந்து, ஈரோடு மாவட்ட அலுவலகம் அருகே வாகன ஓட்டிகளுக்கு வெயிலின் தாக்கத்தை சமாளிக்க பச்சை நிற பசுமை பந்தல் பில்டர்ஸ் அஸோஸியேஷன் சார்பில் அமைக்கப்பட்டது. இதனால் வாகன ஓட்டிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## லாரி மீது கார் மோதி விபத்து; பிரபல மலையாள நடிகர் பலி



திருவனந்தபுரம்: கேரளம் மாநிலம் பத்தனம்திட்டா அருகே இன்று காலை லாரி மீது கார் மோதிய விபத்தில் பிரபல மலையாள நடிகர் சந்தோஷ் கே. நாயர் பரிதாபமாக இறந்தார். அவரது மனைவி படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். மலையாள சினிமாவில் முன்னணி நடிகர்களில் ஒருவர் சந்தோஷ் கே. நாயர் (65). கடந்த 1982ம் ஆண்டு 'இது ஞங்களுடெ கதா' என்ற படத்தின் மூலம் மலையாள சினிமாவில் அறிமுகமானார். 100க்கும் மேற்பட்ட படங்களில் வில்லன், நாயகன், நகைச்சுவை, குணச்சித்திர வேடங்களில் நடித்துள்ளார். காலை சுமார் 6.30 மணியளவில் நடிகர் சந்தோஷ் கே. நாயர் பத்தனம்திட்டா அருகே தன்னுடைய மனைவி சுப யுடன் காரில் சென்று கொண்டு இருந்தார். அடூர் அருகே சென்று கொண்டிருந்தபோது திடீரென கார் கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த லாரியுடன் நேருக்கு நேர் மோதியது.



ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் பச்சைமலை முருகன் கோவிலில் சித்திரை 22ம் தேதியான நேற்று சத்ருசம்ஹார பூஜை மற்றும் சிறப்பு அபிஷேகங்கள் நடைபெற்றன. அதனை தொடர்ந்து வள்ளிநாயகி, தெய்வநாயகி சமேத சுப்பிரமணிய சுவாமிக்கு மஹா தீபாராதனை காட்டப்பட்டது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர். மேலும், அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.



ஈரோடு 19வது வட்ட திமுக உறுப்பினர் பெருமாள், தேர்தல் முடிவுகளில் திமுக பின்னடைவைச் சந்திப்பதை கண்டு அதிர்ச்சியில் உயிரிழந்தார். இச்சம்பவம் கட்சியினரிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. தகவலறிந்த ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளர் முத்துசாமி நேற்று பெருமாளின் இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி நிதியுதவி வழங்கினார்.

# புதுச்சேரியில் 'நட்பு' போட்டியால் கடும் சரிவை சந்தித்தது காங்கிரஸ்

புதுச்சேரி: புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலில் 'நட்பு' போட்டியால் கடும் சரிவை சந்தித்துள்ளது காங்கிரஸ் கட்சி. புதுச்சேரியில் இண்டியா கூட்டணிக்கு யார் தலைமை என்பதிலும் கூடுதல் தொகுதிகளைப் பெறுவதிலும் காங்கிரஸ் - திமுக இடையே கடும் போட்டி நிலவியது.

இதனால் இக்கூட்டணியே உடையும் நிலை ஏற் பட்டது. அத்துடன் இண்டியா கூட்டணியில் காங்கிரஸ் 16, திமுக 13, விடுதலை சிறுத்தைகள் கட்சி ஒரு இடத்தில் போட்டியிடுவதாக வேட்பு மனுதாக்கல் நிறைவுக்கு பிறகு அறிவிக்கப்பட்டது.

ஆனால், இண்டியா கூட்டணி யில் இருந்த இந்திய கம்யூனிஸ்ட் ஒரு இடத்திலும், மார்க்சிஸ்ட் இரு இடங்களிலும், போட்டி காங்கிரஸ் வேட்பாளர்கள் 6 தொகுதிகளிலும் போட்டி யிட்டனர். அதிலும் திமுகவுக்கு எதிராகவே காங்கிரஸும்



5 தொகுதிகளில் போட்டியிட்டது.

குறிப்பாக திமுகவுக்கு எதிராக காங்கிரஸ் காலாப்பட்டு, ராஜ்பவன், திருபுவனை, மங்கலம், காரைக்கால் தெற்கு தொகுதிகளிலும், விசிகவுக்கு எதிராக உழவர்கரையிலும் காங்கிரஸ் போட்டியிட்டது.

அதே நேரத்தில், தொகுதி பங்கீடு, கூட்டணிக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் காங்கிரஸ் வேட்பாளர்கள் களமிறங்கியதால் ஏற்பட்ட அதிருப்தியில் சற்று மனத்தாங்கலுடன் காங்கிரஸ், திமுக கூட்டணி பிரச்சாரம் நடந்தது. இண்டியா கூட்டணியின் பிளவை மையப்படுத்தியே எதிர்த்தரப்பில் என்டிஏ கூட்டணி பிரச்சாரம் மேற்கொண்டது.

இண்டியா கூட்டணி முறிவால் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் அவர்கள் கட்சி பிரமுகர்கள் போட்டியிடும் தொகுதிகளில் மட்டும் பிரச்சாரம் செய்தனர். விடுதலைத் சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் தனது கட்சி போட்டியிடும் தொகுதியிலும், செல்லும் வழியில் திமுக வேட்பாளர்கள் தொகுதியிலும் மட்டும் பிரச்சாரம் செய்தார்.

இதை ஈடுகட்ட தேசிய தலைவர்களை அழைத்து வந்து காங்கிரஸ் பிரச்சாரம் செய்தது. காங்கிரஸ் தலைவர் முகுல் வாஸ்னிக் கூட்டணியுடன் பேசி சரி செய்யத் தொடங்கினார். இதற்கு விசிக தரப்பும் செவி சாய்த்தது. ஆனால் இதர இண்டியா கூட்டணி கட்சிகள் ஒன்றுபடவே இல்லை.

புதுச்சேரிக்கு ஸ்டாலினும், ராகுலும் பிரச்சாரத்துக்கு வந்தாலும் ஒரே மேடையில் பிரச்சாரம் செய்யவில்லை. தனித்தனியாகவே பிரச்சாரம் செய்தனர். இண்டியா கூட்டணியிலேயே திமுகவை எதிர்த்து போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர்கள் காலாப்பட்டில் ஷாஜகான், காரைக்கால் தெற்கு ஏவிஎஸ் சக்திவேல் பிரபு, ராஜ்பவனில் குமரன், திருபுவனையில் வேலு, மங்கலத்தில் ரகுபதி ஆகிய 5 பேரும் தோல்வியடைந்தனர் இக்கூட்டணியில் விசிகவை எதிர்த்து உழவர் கரையில் போட்டியிட்ட சிவ சங்கரன் ஆகிய அனைத்து போட்டி வேட்பாளர்களும் தோல்வி அடைந்தனர்.

காலாப்பட்டு, காரைக்கால் தெற்கு, ராஜ்பவன் ஆகிய மூன்று தொகுதிகளில் திமுகவே வென்றது. ஆனால் காங்கிரஸோ கடந்த முறையை விட சரிந்து ஒரு தொகுதியில் மட்டுமே வென்றுள்ளது.

# "திமுக கூட்டணியில் உள்ள எந்தக் கட்சியும் தவெகவுக்கு ஆதரவு கொடுக்காது" வைகோ நம்பிக்கை

சென்னை:

"திமுக கூட்டணியில் உள்ள எந்தக் கட்சியும் தவெகவுக்கு ஒரு போதும் ஆதரவு கொடுக்க மாட்டார்கள் என்பது எனது திடமான கருத்தாகும்" என மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்தார்.

சென்னை அறிவாலயத்தில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலினை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, "இந்த தேர்தலில் திமுகவை விட தவெகவுக்கு அதிக இடங்களை கொடுத்த மக்கள் தீர்ப்பை மதிக்கிறோம். தவெக ஆட்சியமைக்க இன்னும் 10 எம்எல்ஏக்கள் ஆதரவு தேவை. எங்களிடம் அவர்கள் ஆதரவு கேட்க வரவே மாட்டார்கள். நாங்கள் மிகவும் உறுதிப்பாட்டோடு திமுக கூட்டணியில் நீடிக்கிறோம்.

எங்கள் கூட்டணியில் உள்ள எந்தக் கட்சியோடும் தவெக தொடர்பு வைத்ததாக தெரியவில்லை, தொடர்புவைக்கவும் முடியாது. இந்த கூட்டணியில் உள்ள யாரும் அசைகின்ற மனநிலையில் இல்லை.

மக்களின் தீர்ப்பு என்



பது ஜனநாயகத்தில் மதிக்கப்பட வேண்டியது. திமுக ஆட்சியில் நடந்த அரும்பெரும் சாதனைகளை தொடர வேண்டிய கடமை புதிதாக அமையும் அரசுக்கு உள்ளது.

திமுக கூட்டணியில் உள்ள எந்தக் கட்சியும் தவெகவுக்கு ஒருபோதும் ஆதரவு கொடுக்க மாட்டார்கள் என்பது எனது திடமான கருத்தாகும்" எனத் தெரிவித்துள்ளார்.

# “திமுக கூட்டணியில் தான் இருக்கிறோம்; அதில் மாற்றமில்லை” பிரேமலதா விஜயகாந்த் பேட்டி



சென்னை:
நாங்கள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில்தான் இருக்கிறோம். அதில் எந்த மாற்றமும் இல்லை என தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், விஜய்யின் தவெக 108 இடங்களைக் கைப்பற்றி இருக்கிறது. இருப்பினும், ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மை பலமான 118 இடங்களைப் பெறாததால், தமிழகத்தில் தற்போது தொங்கு சட்டப் பேரவை' அமையும் சூழல் உருவாகியுள்ளது. இந்நிலையில், ஆட்சி அமைக்க இன்னும் 10 இடங்கள் தேவைப்படுவதால், தேமுதிக, விசிக உள்ளிட்ட மற்ற கட்சிகளிடம் பேச்சுவார்த்தை நடத்த வாய்ப்புள்ளது.

இந்நிலையில், தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா செய்தியாளர்களிடம் பேசும்போது, "புதிதாக வந்திருக்கும் விஜய்க்கு எனது வாழ்த்துகள். நாங்கள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில்தான் இருக்கிறோம். அதில் எந்த மாற்றமும் இல்லை.

விஜய் எங்கள் வீட்டு பிள்ளை. அவருக்கு வாழ்த்துகள். விஜய் எங்களுக்கு புதியவர் இல்லை. அவர் இப்போதுதான் அரசியலுக்கு வந்திருக்கிறார். மக்களுக்கு நல்லது செய்யப்பட்டும்" இவ்வாறு அவர் கூறினார்.

# “மக்கள் நலன், மாநில முன்னேற்றத்துக்காக விஜய் செயல்படுவார்” செல்வப்பெருந்தகை நம்பிக்கை



சென்னை: "மக்களின் தீர்ப்பு எங்கள் வழிகாட்டி; மக்களின் நலன் எங்கள் உயர்ந்த கடமை. இந்தத் தேர்தலில் வெற்றி பெற்ற தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் விஜய், மக்கள் நலனையும் மாநில முன்னேற்றத்தையும் முன்னிலைப்படுத்தி செயல்படுவார் என்ற நம்பிக்கை உள்ளது என தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'தமிழ்நாடு மக்களின் ஜனநாயகத் தீர்ப்பை முழு மரியாதையுடன் ஏற்றுக்கொள்கிறோம். இந்தத் தேர்தலில் வெற்றி பெற்ற தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் விஜய்க்கு மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்கள் நலனையும் மாநில முன்னேற்றத்தையும் முன்னிலைப்படுத்தி அவர்கள் செயல்படுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் தொகுதியில் முழு அர்ப்பணிப்புடன் உழைத்த தோழமைக் கட்சித் தலைவர்கள், நிர்வாகி கள் மற்றும் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

தமிழ்நாடு முழுவதும் நமது கூட்டணி வெற்றிக்காக ஒன்றுபட்டு உழைத்த மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இணைந்த அனைத்து தோழமைக் கட்சிகளுக்கும், மேலும் தமிழ்நாடு முழுவதும் அர்ப்பணிப்புடன் செயல்பட்ட காங்கிரஸ் உறவுகளுக்கும் என் நன்றிகள்.

மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தும் பாதையில், சமூக நீதி மற்றும் ஜனநாயகப் பாதுகாப்பை உறுதியாக நிலைநிறுத்த தொடர்ந்து செயல்படுவோம். மக்களின் தீர்ப்பு எங்கள் வழிகாட்டி; மக்களின் நலன் எங்கள் உயர்ந்த கடமை." எனத் தெரிவித்து உள்ளார்.

# ‘விஜய் வெற்றியை கணித்தபோது ஏளனம் செய்தனர்’ ஆக்ஸிஸ் மை இந்தியா பிரதீப் குப்தா ஆதங்கம்



புதுடெல்லி: தமிழக அரசியல் களத்தில் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் தேர்தல் முடிவுகள் வெளியான நிலையில், பிரபல தேர்தல் 'கணிப்பு நிறுவனமான 'ஆக்ஸிஸ் மை இந்தியா' அமைப்பின் தலைவர் பிரதீப் குப்தா என்டிடிவி ஊடகத்திற்குப் பேட்டியளித்தார். அப்போது, தங்களது நிறுவனத்தின் கணிப்புகள் குறித்து அவர் கூறியதாவது:

தமிழகத் தேர்தலில் நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும், அவர் வெற்றியை நோக்கி நகருவார் என்றும் நாங்கள் கணிப்புகளை வெளியிட்டோம். ஆனால், ஆரம்பத்தில் எங்களுடைய இந்தத் துணிச்சலான கணிப்பைக் கண்டு அரசியல் விமர்சகர்களும், மற்றவர்களும் எங்களை நோக்கிச் சிரித்தார்கள். எங்களை ஒரு பொருட்டாகவே மதிக்காமல் கேலி செய்தார்கள், ஆனால், எதிர்ப்புகளையும் விமர்சனங்களையும் கண்டு நாங்கள் பின்வாங்கவில்லை.

தரவுகளின் அடிப்படையில் மக்கள் மனநிலையை நாங்கள் துல்லியமாக ஆய்வு செய்தோம். தேர்தல் முடிவுகள் வெளியான நிலையில், மக்கள் எங்கள் கணிப்புக்கு ஆதரவாகத்தான் வாக்களித்துள்ளனர் என்பது உறுதியாகியுள்ளது.

எங்களை எள்ளி நகையாடியவர்கள் இப்போது மவுனமாகி விட்டனர். தமிழகத்தில் ஒரு புதிய அரசியல் சக்தியின் வருகையைத் எங்களது நிறுவனம் முன்கூட்டியே உணர்ந்திருந்தது. அது இப்போது உண்மையாகியுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# தவெக சார்பில் சட்டமன்றத்திற்கு செல்லும் இளம் வேட்பாளர்



தேனி: பெரியகுளம் சட்டமன்ற தொகுதியில் தவெக சார்பில் போட்டியிட்ட சபரி ஐயங்கரன், அக் கட்சியின் இளம் வயது சட்டமன்ற உறுப்பினர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் வாக்கு எண்ணிக்கை நேற்று நடைபெற்ற நிலையில், முதன்முறையாக சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட தவெக 108 தொகுதிகளை கைப்பற்றி தமிழ்நாட்டில் ஆட்சி அமைக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக அக் கட்சியின் தலைவர் விஜய், ஆட்சி அமைக்க அழைக்குமாறு தமிழ்நாடு ஆளுநருக்கு இமெயில் மூலம் கடிதம் அனுப்பியுள்ளார். இந்த நிலையில் தேனி மாவட்டத்தில் மொத்தம் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளில், இரண்டு தொகுதிகளில் தமிழக வெற்றி கழகத்தின் வேட்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளனர். சட்டப் பேரவை தேர்தலில் பெரியகுளம் தொகுதியில் தவெக சார்பில் போட்டியிட்ட சபரி ஐயங்கரன், கம்பம் சட்டமன்ற தொகுதியில் ஜெகநாத் மிஸ்ரா ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர். மேலும் ஆண்டிபட்டி மற்றும் போடி தொகுதிகளில் தவெக வேட்பாளர்கள் பாண்டி மற்றும் பிரகாஷ் ஆகியோர் இரண்டாம் இடம் பிடித்துள்ளனர்.

இதனிடையே, பெரியகுளம் சட்டமன்றத் தொகுதியில் விடுதலை சிறுத்தைகள் கட்சி வேட்பாளரைவிட 19,321 வாக்குகள் அதிகம் பெற்று தவெக வேட்பாளர் சபரி ஐயங்கரன் (மொத்த வாக்குகள் 85,656) வெற்றி பெற்றுள்ளார். இவருக்கு வயது 29. இதன் மூலம் தமிழக வெற்றிக் கழகத்தின் இளம் வயது எம்எல்ஏ என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

இவர் கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் விஜய் மக்கள் இயக்கத்தில் இணைந்து பணியாற்றி வருகிறார். அதுமட்டுமின்றி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராகவும் இருந்து வருகிறார். இவர் முதன்முறையாக தேர்தலில் போட்டியிட்டு தவெக சார்பில் வெற்றி பெற்றதையடுத்து அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் பட்டாசுகள் வெடித்து, கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

தவெக அதிகபட்சமாக 35.94 சதவீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றது. அதனை தொடர்ந்து திமுக 24.19 சதவீத வாக்குகள் பெற்று இரண்டாவது இடம்பிடித்துள்ளது. கடந்த முறை தமிழ்நாடு சட்டப் பேரவையில் எதிர்க்கட்சியாக செயல்பட்ட அதிமுக 21.21 சதவீத வாக்குகள் பெற்று மூன்றாவது இடம் பிடித்துள்ளது.

# தவெகவை ஆதரிப்பது குறித்து இன்னும் முடிவெடுக்கவில்லை; பொறுத்திருந்து பார்ப்போம்: விசிக தலைவர் திருமாவளவன் பேட்டி



சென்னை:
"தவெகவுக்கு ஆதரவளிப்பது குறித்து இன்னும் நாங்கள் சிந்திக்கவில்லை; முடிவெடுக்கவில்லை. அரசியலில் அடுத்தது என்ன நடக்கிறது என்று பொறுத்திருந்து பார்ப்போம்" என விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

காரல் மார்க்ஸ் பிறந்தநாளை முன்னிட்டு அவரின் சிலைக்கு மரியாதை செலுத்திய பின்னர் சென்னையில் விசிக தலைவர் திருமாவளவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய திருமாவளவன், "நடந்து முடிந்த தேர்தலில் திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் அதிமுக - பாஜக தலைமையிலான சங்பரிவார் அரசியலை வீழ்த்தியுள்ளது. அந்த வகையில் நாங்கள் முன்னெடுத்த முயற்சி வெற்றி பெற்றதாக எண்ணி மகிழ்ச்சியடைகிறோம். இதற்காக மக்களுக்கு நன்றியை உரித்தாக்குகிறோம்.

இடதுசாரிகளுடன் இணைந்து நாங்கள் அரசியல் களத்தில் பயணித்து வருகிறோம். எதிர்காலத்திலும் முக்கிய அரசியல் முடிவுகளை இணைந்தே எடுப்போம். தவெகவுக்கு ஆதரவளிப்பது குறித்து இன்னும் நாங்கள் சிந்திக்கவில்லை; முடிவெடுக்கவில்லை. அரசியலில் அடுத்து என்ன நடக்கிறது என்று பொறுத்திருந்து பார்ப்போம். ஊகமான கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாது" என்று கூறினார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் பெரும்பான்மைக்கு 118 இடங்கள் தேவையென்ற நிலையில், 108 இடங்களில் மட்டுமே தவெக வெற்றி பெற்றுள்ளது. ஆட்சியமைக்க தேவையான பெரும்பான்மை இல்லாததால், மற்ற கட்சிகளின் ஆதரவு அக்கட்சிக்கு தேவை.

திமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள காங்கிரஸ் 5, விசிக, சிபிஐ, சிபிஎம், ஐயுஎம்எல் கட்சிகள் தலா 2 இடங்களிலும், தேமுதிக 1 தொகுதியிலும் வெற்றிபெற்றுள்ளது. அதேபோல அதிமுக கூட்டணியில் இடம்பெற்ற பெற்ற பாமக 4, அமமுக 1 தொகுதியில் வெற்றி பெற்றுள்ளது. விஜய் ஆட்சியமைக்க இதில் சில கட்சிகளின் ஆதரவை பெற்றாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மேற்கு வங்கத்தில் பாஜகவின் வன்முறை முகம் அம்பலம்: திரிணமூல் காங்கிரஸ் குற்றச்சாட்டு



கொல்கத்தா: மேற்கு வங்கத்தில் தங்கள் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மீது பாஜகவினர் தாக்குதல் நடத்துவதாகவும், தங்கள் கட்சி அலுவலகங்களை சூறையாடுவதாகவும் திரிணமூல் காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக திரிணமூல் காங்கிரஸ் கட்சி வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், மூதாட்டி ஒருவர் முகத்தில் காயமடைந்த நிலையில் ரத்தக் கறையோடு சாலையில் படுத்திருக்கும் காட்சி இடம்பெற்றுள்ளது.

அந்த வீடியோவோடு வெளியிடப்பட்டுள்ள பதிவில், "அலிபுர்துவாரில் ஒரு வயதான மூதாட்டியை பாஜகவின் கொடூரமாக தாக்கி உள்ளனர். பட்டப்பகலில் கலவரம் செய்யவும், அப்பாவி மக்களை படுகொலை செய்யவும் நரேந்திர மோடியும் அமித் ஷாவும் தங்கள் கட்சித் தொண்டர்களுக்கு முழு சுதந்திரம் கொடுத்துவிட்டார்களா?

தேர்தலுக்குப் பிந்தைய காலகட்டம் அமைதியாகவும் வன்முறையின்றியும் இருப்பதை உறுதி செய்வதற்காக என்று கூறி தேர்தலுக்குப் பிறகும் பணியில் இருப்பார்கள் என அறிவிக்கப்பட்ட மத்தியப் படைகள் இப்போது எங்கே இருக்கின்றன?

பாஜகவினரின் வன்முறையை எளிதாக்குவதற்காக மட்டுமே அவர்கள் இருக்கிறார்களா? பாஜகவின் வன்முறை முகம் அம்பலமாகி உள்ளது. மேற்குவங்கம் இந்த காட்டுமிராண்டித்தனத்தை பொறுத்துக்கொள்ளாது. சிந்தப்பட்ட ஒவ்வொரு துளி ரத்தத்துக்கும் பதில் சொல்லியாக வேண்டும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரிணமூல் காங்கிரஸ் வெளியிட்டுள்ள மற்றொரு வீடியோவில், ஓர் அலுவலகம் தாக்கப்படும் காட்சிகள் இடம் பெற்றுள்ளன. அந்த பதிவில், "பாஜக ஆட்சிப் பொறுப்பேற்ற மறுகணமே தனது உண்மையான முகத்தை வெளிப்படுத்திவிட்டது.

ஜல்பைகுரி வார்டு 14-ல் உள்ள திரிணமூல் காங்கிரஸ் அலுவலகத்தில், பாஜக ஆதரவு பெற்ற சமூக விரோத சக்திகள் தாக்குதல் நடத்தி உள்ளனர். அமைதியின்மையை உருவாக்க திட்டமிட்ட ரீதியில் நடத்தப்பட்ட செயல் இது. இதுதான் பாஜகவின் உண்மையான முகம்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொல்கத்தாவின் டோலிகஞ்ச், கஸ்பா பகுதிகளிலும், ஹவுராவின் பரநகர், கமர்ஹாட்டி பகுதிகளிலும் திரிணமூல் காங்கிரஸ் அலுவலகங்கள் சேதப்படுத்தப்பட்டதாக புகார் எழுந்துள்ளது.

இதனிடையே, தேர்தல் வெற்றியை அடுத்து திரிணமூல் காங்கிரஸ் கட்சியினர் மீதும், சொத்துக்கள் மீதும் பாஜகவினர் தாக்குதல் நடத்துவதாக தனக்கு தகவல்கள் வருவதாகவும் எனவே கட்சியினர் அனைவரும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்றும் மம்தா பானர்ஜி வேண்டுகோள் விடுத்துள்ளார். தாக்குதல்கள் குறித்து காவல்துறையில் புகார் அளிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த வன்முறை மற்றும் தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அடுத்தகட்ட நடவடிக்கைகளைத் தொடங்குவதற்காக காவல்துறையிடமிருந்து அறிக்கை கோரப்பட்டிருப்பதாகவும் தேர்தல் ஆணைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இத்தகைய தாக்குதல்களுக்கும் தங்கள் தொண்டர்களுக்கும் தொடர்பு இல்லை என்று பாஜக தெரிவித்துள்ளது.

தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு திரிணமூல் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் மீதுள்ள விரக்தியை வெளிப்படுத்தும் நோக்கில் அக்கட்சிக்குள்ளேயே இருக்கும் போட்டி கோஷ்டிகள் இச்செயல்களில் ஈடுபட்டிருக்கலாம்" என்று பாஜக மூத்த தலைவர் ராகுல் சின்ஹா தெரிவித்துள்ளார்.

# அனைத்து குழந்தைகளுக்கும் நீரிழிவு நோய் பரிசோதனை: வாழ்நாள் சிகிச்சை அளிக்க மத்திய அரசு திட்டம்



புதுடெல்லி: இளம் வயதினர் இடையே நீரிழிவு நோய் அதிகரித்து வருகிறது. இதைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு தனது முதன்மை திட்டமான ராஷ்ட்ரிய பால் ஸ்வஸ்தய காரியக்ரம் (ஆர்பிஎஸ்கே) திட்டத்தை விரிவுபடுத்துகிறது.

இதன்மூலம் பிறப்பு முதல் 18 வயது வரையிலான அனைத்து குழந்தைகளுக்கும் நீரிழிவு நோய் பரிசோதனை செய்து, வாழ்நாள் முழுவதும் இலவச சிகிச்சை வழங்க உள்ளது. தேசிய பொது சுகாதார மாநாட்டில் மத்திய சுகாதார அமைச்சகத்தால் ஒரு வழிகாட்டு ஆவணம் வெளியிடப்பட்டது. இதில் குழந்தைப் பருவ நீரிழிவு நோய்க்கான பரிசோதனை, நோயறிதல், சிகிச்சை மற்றும் நீண்டகால மேலாண்மை ஆகியவற்றுக்காக ஒரு தேசிய கட்டமைப்பு வகுக்கப்பட்டுள்ளது. நோயை முன்கூட்டியே கண்டறிவதையும் தொடர் சிகிச்சையை உறுதி செய்வதையும் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த திட்டம், மத்திய அரசின் மறுசீரமைக்கப்பட்ட ஆர்பிஎஸ்கே 2.0 திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

இந்த வழிகாட்டுதல்கள், மோசமான உணவுப் பழக்கம், குறைந்து வரும் உடல் சார்ந்த செயல்பாடுகள், அதிக திரைப் பயன்பாடு உள்ளிட்ட அதிகரித்து வரும் வாழ்க்கை முறை அபாயங்களையும் சுட்டிக் காட்டுகின்றன. மேலும், தொடர் சிகிச்சையை வலுப்படுத்த, டிஜிட்டல் முறையிலான கண்காணிப்பு கட்டமைக்கப்பட்ட பின்தொடர்தல் முறைகளையும் அறிமுகப்படுத்துகின்றன. இந்த திட்டத்தின் கீழ் நடமாடும் சுகாதாரக் குழுக்கள், பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் உள்ள குழந்தைகளை பரிசோதனை செய்யும்.

# 200 தொகுதிகளில் வெற்றி பெறுவோம் என்ற அதீத நம்பிக்கை: சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக சரிந்த பின்னணி என்ன?



சென்னை: சட்டப்பேரவைத் தேர் தலில் 200 தொகுதி களில் வெற்றி பெற்று மீண் டும் ஆட்சியமைப்போம் என்று மார் தட்டிய திமுக, படுதோல்வி யை சந்தித்துள்ளது. பத வி யே ற்பு முன்னேற்பாடுகள், அடுத்த அமைச்சரவை பட்டியல் என எக்கச்சக்க எதிர்பார்ப்புகளுடன் காத் திருந்த அறிவா ல யம் தற் போது மயா ன அ மை தி யில் ஆழ்ந்துள்ளது.

கார்ப் பரேட் குழுவான பென் டீம், உள வுத் து றையை முழுமையாக நம்பிய திமுக தலைமை, எல்லாம் சரியாக போய்க் கொண் டிருக்கிறது. 2024 நாடாளுமன்றத் தேர்தல் முடிவு களே இப்போதும் வரும் என்ற அதீத நம்பிக்கையில் மாட்டிக் கொண்டதுதான் முதல் சறுக்கல்.

கள த்தில் ஆட்சிக்கு எதிரா ன எ திர்ப்பலை வீசுவதை அவர்கள் முழுமையாக உணரவில்லை. எதி ர்க்கட்சிக ள் சிதறிக் கிடக் கி ன் றன, நமக்கு லாபம்தான் என கணக்கு போட்டனர். ஆனால், தேர்த லில் திமுகவுக்கு எதிராக பதிவான சுமார் 60 சத வீத வாக்குகள், மக்களின் கோபத்தை அப்பட்டமாக க் காட்டியிருக் கிறது.

## தவெகவை குறைத்து மதிப்பீடு

அது வெறும் ரசிகர் கூ ட் டம், வாக்குகளாக மாறாது என விஜய்யின் த வெகவை திமு க முன் ன ணி தலை வர்கள் தொடர்ந்து கிண்டல் செய்ததும், குறைத்து மதிப்பிட்டது ம் மிகப்பெரிய வரலாற்றுப் பிழை. இளைஞர்கள், பெண்கள் மத்தியில் தவெக ஏற்படுத்திய அ மை திப் பு ரட் சியை கணி க்க வியூகக் குழுக்களும், உளவுத்துறையும் கோட்டைவிட்டுவிட்டன.

## கைகொடுக்காத மெகா கூட்டணி

எங்க ள் கூட்டணியில் 20-க் கும் மேற்பட்ட கட்சிகள் இருக்கின்றன. இந்தக் கூட்டணிக் கணக்கே எ ங் களை க் கரையேற்றும் என நம்பினார் ஸ்டாலின் . ஆனா ல், அந்த க ண க்கு கா கிதத்தில் இ ரு ந்ததே தவிர, களத் தி ல் வேலை செய்யவில்லை.

திமுக தனது வழக்கமான 24 சத வீத வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளது. தேமுதிக, காங்கிரஸ், விசிக போன்ற கூட்டணி க ட் சி கள் வாக்குகள் தி மு கவுக்கு முழுமை யா க டிரான்ஸ்பர் ஆகவில்லை.

## கார்ப்பரேட் ஆதிக்கம்

திமுகவின் மிகப்பெரிய பலமே அதன் நி ர்வாக க ட் டமைப்புதான். ஆனால், 2021 தேர்தலில் ஆட்சிக்கு எதிரான அலையில் பெ ற்ற வெற்றியை ஐ பேக் நிறுவன உதவியுட ன் வென்றதாக நம்பியதே திமு கவின் தவறாகும்.

அதன் தாக்கமாக உருவாக்கப்பட்ட கார்ப்பரேட் குழு வான பென் டீம்மை மு ழு மையாக நம்பி தி முக தலைமை செயல் பட்டது. ஆட்சி நிர்வாகம் தொடங்கி தேர்த ல் வேட்பாளர் வரை அனைத்து பணிகளிலும் அதன் தலையீடு இருந்தது.

அவ ர் கள் கொடுத்த தர வுகளை வைத்துக் கொண்டு தே ர் தல் பணிகளை செய்தது. இதனால் கால ங் கா ல மாக உழைத்த உட ன் பிறப்புகளின் க ருத்துகளுக்கு அங்கே மதிப்பில்லாமல் போனது.

மேலு ம் , திமுகவின் தோல்விக்கு அமைச்சர்கள் மற் றும் மாவட்டச் செயலாளர்களின் 'பெரியண் ண ன்' மனப்பான்மையும் முக்கியக் காரணமாக கூறப்படுகிறது. 'எங்களை மீறி மாவட்டத்தில் எதுவும் நடக்காது' என்ற ரீதியில் அவர்கள் செயல் பட்ட விதம் பொதுமக்களிட ம் கடு ம் அதிருப்தியை சம்பாதித்தது.

## சொதப்பலான வேட்பாளர் தேர்வு

பென் டீம் ரிப்போர்ட் மற் றும் குடும்ப உறவு க ளின் ஆதிக்கத்தால் வே ட் பாளர் களைத் தேர்வு செய் ததில் பல்வேறு இடங்களில் திமுக தலைமை கோட் டைவிட் ட து . துரை முருகன் தொடங்கி பல்வேறு சீனியர் க ளுக்கு மீண்டும் வாய்ப்பு வழங் கியது கட் சிக்கு ள் அதிருப்தியானது.

சிட்டிங் எம்எல்ஏக்கள் 31 பேருக்கும், 2 அமைச் ச ருக்கும் மீண்டும் சீட் தர ப் படவில்லை. இவர் களில் பலர் வெளிப்படையா கவே உ ள் ள டி வேலைகளி ல் ஈடுபட் டனர்.

காலை உ ணவுத் திட் டம் உட்பட பல்வேறு நலத்திட் டங்களை அரசு கொண்டு வந்தும், அதை மக்களி டம் கொண் டுசேர்க்க திமுக தவற விட்டது.

# சட்டசபை தேர்தலில் அரசியல் கட்சிகள் பெற்ற வாக்கு சதவீதம் எவ்வளவு?



தமிழகத்தில் நடந்து முடிந்த 17-வது சட்டசபை தேர்தலில், அரசியல் கட்சிகள் பெற்ற வாக்கு சதவீத விவரம் வருமாறு:-

த.வெ.க. - 34.92 சதவீதம் (1 கோடியே 72 லட்சத்து 26 ஆயிரத்து 209 வாக்குகள்)

தி.மு.க. கூட்டணி

தி.மு.க. - 24.19 சதவீதம் (1 கோடியே 19 லட்சத்து 29 ஆயிரத்து 144)

காங்கிரஸ் - 3.37 சதவீதம் (16 லட்சத்து 61 ஆயிரத்து 312)

தே.மு.தி.க. - 1.20 சதவீதம் (5 லட்சத்து 89 ஆயிரத்து 500) விடுதலை சிறுத்தைகள் கட்சி - 1.09 சதவீதம் (5 லட்சத்து 40 ஆயிரத்து 56)

இந்திய கம்யூனிஸ்டு - 0.66 சதவீதம் (3 லட்சத்து 26 ஆயிரத்து 488)

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு - 0.60 சதவீதம் (2 லட்சத்து 93 ஆயிரத்து 817)

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் - 0.29 சதவீதம் (1 லட்சத்து 42 ஆயிரத்து 465)

அ.தி.மு.க. கூட்டணி

அ.தி.மு.க. - 21.21 சதவீதம் (1 கோடியே 4 லட்சத்து 62 ஆயிரத்து 146 வாக்குகள்)

பா.ஜ.க. - 2.97 சதவீதம் (14 லட்சத்து 67 ஆயிரத்து 24)

பா.ம.க. - 2.3 சதவீதம் (சுமார் 10 லட்சம்)

தனித்து போட்டி

நாம் தமிழர் கட்சி - 4 சதவீதம் (19 லட்சத்து 72 ஆயிரத்து 537)

# தலைமைச் செயலகத்தில் அமைச்சர்கள் அறைகளில் உள்ள படங்கள், பொருட்கள் அகற்றம்



தமிழக சட்டசபை தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு நேற்று முடிவுகள் அ றி வி க் க ப் ப ட் ட ன . இதில் விஜய்யின் தவெக 108 இடங்களை கைப்பற்றி புதிதாக ஆட்சி அமைக்க உள்ளது. ஆளும் கட்சியான திமுக, பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது. குறிப்பாக முதல்வர் ஸ்டாலின் உட்பட16 அமைச்சர்கள் இந்த தேர்தலில் தோல்வியடைந்துள்ளனர்.

தனிப்பெரும் கட்சியாக உள்ள தவெக, புதிதாக ஆட்சி அமைக்க உள்ளது. பெரும்பான்மையை நிரூபிக்க தவெகவுக்கு இன்னும் 11 இடங்கள் தேவை எனும் நிலை உள்ளது. இதற்காக காங்கிரஸ், கம்யூனிஸ்டு கட்சிகள், மற்றும் பிற கட்சிகளுடன் தவெக பேச்சுவார்த்தை நடத்தி வருவது குறிப்பிடத்த க்கது. இந்த நிலையில், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தனது முதல்-அமைச்சர் பதவியை ராஜினாமா செய்ததை அடுத்து தமிழக தலைமைச் செயலகத்தில் அமைச்சர்கள் அறைகளில் உள்ள படங்கள் மற்றும் பொருட்களை அகற்றும் பணியில் பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். அமைச்சர்களின் அறைகளில் உள்ள கருணநிதி, மு.க.ஸ்டாலின், உதயநிதி ஆகியோரின் புகைப்படங்கள் அகற்றப்பட்டு வருகின்றன.

# everal Delhi to West Asia flights cancelled; Iran FM to leave for China



*US-Iran war LIVE: Iran and the US tested an already fragile ceasefire as both nations fired munitions at each other in the crucial waterway of the Strait of Hormuz in the last 24 hours. While US President Donald Trump refused to comment on whether the truce holds or not, in an interview to*

*Fox News*

*, he warned that Iran will be "blown off the face of the Earth" if it targets US ships.*

*What triggered the attacks?*

*It all started when Trump on Monday said that the US would begin guiding ships through the Strait of Hormuz, in an effort he dubbed "Project Freedom."*

*"For the good of Iran, the Middle East, and the United States, we have told these Countries that we will guide their Ships safely out of these restricted Waterways, so that they can freely and ably get on with their business," he wrote in a post on Truth Social.*

*Following this, Iran warned that "any foreign military force, especially the invading American army ... will be attacked" if they try to approach or enter the Strait of Hormuz.*

*Here's where things stand*

*Echoing Trump's statements, US Central Command chief Adm. Bradley Cooper also declined to weigh in on whether the nearly monthlong ceasefire will continue.*

*"I wouldn't go into details of whether the ceasefire is over or not," Adm. Bradley Cooper, head of US Central Command, told reporters Monday, as reported by CNN. "I think the key thing is, for us, is we're merely there as a defensive force and to give a very thick layer of defense to commercial shipping to allow them to proceed out of the (Persian Gulf),"*

*Iran reportedly launched several cruise missiles, drones, and small boats targeting US Navy vessels as well as commercial ships under U.S. protection, according to Cooper, as cited by CNN. In response, the US military said it destroyed six small Iranian boats in the Strait of Hormuz on Monday. However, Iranian state media rejected this claim, disputing that any boats were sunk. Later, Trump stated that the US had actually shot down seven small Iranian boats.*

*The US military said Monday that two American-flagged merchant ships had successfully transited the Strait of Hormuz and that Navy guided-missile destroyers in the Persian Gulf were helping to restore shipping traffic. Iran denied these reports, saying no US-flagged merchants crossed the Hormuz.*

*The US also refuted Iran's claims that its navy had fired warning shots near US Navy destroyers operating near the Strait of Hormuz. "No U.S. Navy ships have been struck," CENTCOM said in a post on X.*

*Is the Middle East under fire again?*

*The Middle East, which bore the brunt of the US-Iran war, has once again come under fire as hostilities between the two nations increase. UAE on Monday said it had come under attack from Iran for the first time since a fragile ceasefire took hold in early April. The Gulf nation condemned Iranian strikes, saying its air defenses "engaged" 19 Iranian missiles and drones.*

*Three Indians were also injured following a drone strike that sparked a "major fire" at the Fujairah Oil Industry Zone. UAE also accused Iran of targeting an empty crude oil tanker owned by ADNOC with drones as it transited the Strait of Hormuz, according to Reuters. ADNOC's maritime logistics unit said the vessel, Barakah, was empty at the time of the attack and no injuries were reported.*

# சினிமா புகழை மட்டும் வைத்து ஆட்சியை பிடித்து விட முடியுமா? தவெகவின் 'விசில் புரட்சி' குறித்து எஸ்.வி.சேகர் பேட்டி



சென்னை: வாக்காளர்களுக்கு பணம் கொடுக்காமல், வீடு வீடாக சென்று பிரச்சாரம் செய்யாமல் விசில் புரட்சியை தவெகவினர் நடத்தியிருப்பதாக நடிகர் எஸ்.வி.சேகர் தெரிவித்தார்.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் 108 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. மேலும் அக் கட்சியின் தலைவர் விஜய் போட்டியிட்ட சென்னை பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய இரு தொகுதிகளிலும், அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார். அதேபோல் தவெக பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், செங்கோட்டையன், ஆதவ் அர்ஜுனா உள்ளிட்ட பலர் வெற்றி பெற்றுள்ளனர்.

இந்த சூழலில் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து, நடிகரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.வி. சேகர் நமது ஈடிவி பாரத் தமிழ்நாடு செய்தியாளரிடம் பேசினார்.

அப்போது அவர், "இந்த முடிவு அதிர்ச்சியாக இருப்பதை விட, ஆச்சரியமாக உள்ளது. இந்தத் தேர்தலிலும், மாநிலம் முழுவதும் வாக்காளர்களுக்கு 2500 கோடி ரூபாய் வாக்களிப்பதற்காக கொடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது. அதை தாண்டி பெரிதாக வாக்காளர்களுக்கு பணம் கொடுக்காமல், தெருத்தெருவாக வீடு வீடாக சென்று பிரச்சாரம் எதுவும் செய்யாமல் விஜய் சொன்னது போல் ஒரு பெரிய விசில் புரட்சியே நடந்துள்ளது.

ஒருவேளை இதுதான் தொடரும் என்றால், வா க் கா ள ர் க ளு க் கு பணம் கொடுக்காமல் ஜனநாயக முறைப்படி வாக்களிக்க கூடிய ஒரு சூழல் வருவது உண்மையிலேயே மகிழ்ச்சி அளிக்கிறது.

தவெக சார்பில் 108 வேட்பாளர்கள் சட்டமன்றத்திற்குள் செல்கின்றனர். அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகள். எல்லாம் தெரிந்த நபர்கள் தான் செல்ல வேண்டும் என்கிற விதி எதுவும் கிடையாது. அதே போல சம்பாதிக்கும் இடம் சட்டமன்றம் என்கிற எண்ணத்துடன் வரக் கூடாது என்பது என்னுடைய கருத்து.

இந்த தேர்தலில் என்னுடைய அருமை நண்பர் மு.க.ஸ்டாலின், கொளத்தூர் தொகுதியில் தோல்வி அடைந்துள்ளார். பல்வேறு விதமான நலத்திட்டங்களை அந்தத் தொகுதி மக்களுக்கு செய்த போதிலும் அவருக்கு இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது. அதனை கடந்து நேற்று மாலை ஏழு மணி அளவில் அண்ணா அறிவாலயத்திற்கு வருகை தந்தார். ஒருதிரை பிம்பம் மட்டுமே வாக்காளர்களுக்கு வாக்களிக்க போதுமானதாக இருக்கிறதா? இது குறித்து ஆராய்ந்தால், ஆந்திராவில் என்டிஆருக்கு நடந்தது, இருந்த போதிலும் அது சிரஞ்சீவிக்கு நடக்கவில்லை. அந்த வெற்றியானது தற்போது, விஜய்க்கு நடந்துள்ளது. இதனை ஆச்சரியத்துடன் தான் பார்க்கவேண்டும்.

விஜய் இந்த சூழலை பக்குவத்துடன் அணுகி, மக்களுக்கு நல்லது செய்தால் அனைவரும் அவரை பாராட்டுவார்கள்.

தனிப் பெரும்பான்மை இல்லாத ஒரு நேரத்தில் அடுத்த கட்ட நகர்வாக தவெக, மற்ற கூட்டணியில் இருக்கக் கூடிய கட்சிகளை தன்னுடன் இணைத்து செயல்பட வழி உண்டு. இ ரு ப் பி னு ம் கூட்டணிக்கு சம்மதிக்க கூடிய கட்சிகள் யாரும் உடனே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அவர்களுக்கு மந்திரி பதவி வேண்டும் என கேட்பார்கள், அல்லது பெரும்பான்மையை நிரூபிக்க ஆளுநரிடம் கூடுதல் அவகாசம் கேட்கலாம். ஆளுநர் குறிப்பிட்ட காலக்கெடுவில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என ஒப்புதல் அளிக்கக் கூடும். அடுத்து என்ன நடைபெறும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

இதில் திமுகவும், அதிமுகவும் ஒன்றிணைந்து ஆட்சி நடத்த வாய்ப்பு இருக்கிறது. இருப்பினும் அது நடக்காத ஒன்று. இந்த சட்டமன்றத் தேர்தலில் பிராமணர்களுக்கு போட்டியிடுவதற்கான வாய்ப்பு கொடுத்த தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் விஜய்க்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்" என கூறினார்.

# சட்டசபை தேர்தல்: ஆயிரத்திற்கும் குறைவான வாக்கு வித்தியாசத்தில் வென்றவர்கள் யார்..?

தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில், 15 தொகுதியில் 1,000-க்கும் குறைவான வாக்குகளே வெற்றி - தோல்வியை நிர்ணயித்து உள்ளது.

அதன் விவரம் வருமாறு:-

கம்பம் தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் ராமகிருஷ்ணனை த.வெ.க. வேட்பாளர் ஜெகநாத்மிஸ்ரா 751 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தினார்.

கள்ளக்குறிச்சி தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளர் ராஜீவ்காந்தியை த.வெ.க. வேட்பாளர் அருள் விக்னேஷ் 798 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

கன்னியாகுமரி தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் ஆர்.மகேஷை அ.தி.மு.க. வேட்பாளர் தளவாய்சுந்தரம் 214 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

கோவில்பட்டி தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் கருணாநிதி, த.வெ.க. வேட்பாளர் பாலசுப்பிரமணியனை 843 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தினார்.

குளித்தலை தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் ஏ.சந்திரன், த.வெ.க. வேட்பாளர் ஜி.பாலசுப்பிரமணியை 579 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

கும்பகோணம் தொகுதியில் த.வெ.க. வேட்பாளர் வினோத், தி.மு.க. வேட்பாளர் அன்பழகனை 679 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

பழனி தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளர் ரவி மனோகரன், த.வெ.க. வேட்பாளர் பிரவீண்குமாரை 693 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

பரமத்தி வேலூர் தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளர் சேகர், தி.மு.க. வேட்பாளர் மூர்த்தியை 308 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்

போளூர் தொகுதியில் த.வெ.க. வேட்பாளர் அபிஷேக், தே.மு.தி.க. வேட்பாளர் சரவணனை 227 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

திண்டிவனம் தொகுதியில் விடுதலை சிறுத்தைகள் கட்சி வேட்பாளர் வன்னி அரசு, அ.தி.மு.க. வேட்பாளர் அர்ஜுனனை 734 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

திருக்கோவிலூர் தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளர் பழனிசாமி, த.வெ.க. வேட்பாளர் பரணி பாலாஜியை 285 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

திருப்பத்தூர் தொகுதியில் த.வெ.க. வேட்பாளர் ஸ்ரீனிவாச சேதுபதி, தி.மு.க. வேட்பாளர் பெரியகருப்பனை 1 வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

உதகமண்டலம் தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளர் போஜராஜன், தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் இப்ராகிம்மை 976 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

வேப்பனஹள்ளி தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் ஸ்ரீனிவாசன், அ.தி.மு.க. வேட்பாளர் கே.பி.முனுசாமியை 138 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

விக்கிரவாண்டி தொகுதியில் பா.ம.க. வேட்பாளர் சிவக்குமார், த.வெ.க. வேட்பாளர் விஜய் வடிவேலை 910 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.